# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 361** **நாள்: 05.11.2025**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், கூட்டங்கள், தேர்தல் பரப்புரைகள், கருத்தரங்கங்கள், ஊர்வலங்கள், தர்ணா, பண்டிகைகள் போன்ற சிறப்பு நிகழ்வுகளுக்காக தற்காலிக கொடிக்கம்பங்கள் நட வேண்டுமெனில், அரசாணை எண்.629, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 16.09.2025ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, பெருநகர சென்னை மாநகராட்சியிடம் முன் அனுமதி பெற்று, தற்காலிக கொடிக்கம்பங்கள் நடப்பட வேண்டும்.

அவ்வாறு முறையான முன் அனுமதி பெறாமல் நடப்படும் தற்காலிக கொடிக்கம்பங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியால் எந்தவித முன்னறிவிப்பின்றி அகற்றப்படும் என அறிவிக்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**